**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 24.07.2026**
**OS. No. 25/2022**
**வழக்கு சாட்சி PW.1–ஜெயகுமார், த/பெ.பழனிசாமி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

5) இந்த வழக்கை பட்டா வேண்டும் என கூறி தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை சீனிவாசன் என்பவர் மீது தாக்கல் செய்துள்ளேன். பட்டா வழங்கும் அதிகாரம் சீனிவாசனிடம் இல்லை என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். நானும், என் அக்கா, என் தாயார் ஆகியோர் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்கில் B ஷெட்டியூல் சொத்தாக என் பத்திரத்திலுள்ள ச.எண்.77/1B ல் கண்ட 4 சென்ட் நிலத்தை காண்பித்துள்ளேன்.

6) ச.எண்.81/3B க்கு எனக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ச.எண்.81/3B க்கு சக்குபந்திகள் இட்டேரிக்கு மேற்கு, கருப்ப கவுண்டர் நிலத்திற்கு வடக்கு, ச.எண்.81/3B ல் உள்ள அய்யாவுவின் மீதி நிலத்திற்கு தெற்கு, அம்மாசி, அழகம்மாள் நிலத்திற்கும் கிழக்கு ஆகும். இதன் மத்தியிலுள்ள 1 ஏக்கர் 62 சென்ட் நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிலத்திற்கு தெற்கு பக்கம் 77/1B உள்ளது, மற்ற மூன்றுபுறங்களிலுள்ள சர்வே எண்கள் எனக்கு தெரியவில்லை. எந்த தேதியில் எனக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் நினைவில்லை. நான் கிரையம் 1995 ல் பெற்றேன். பட்டா கேட்டு எப்போது விண்ணபித்தேன் என்றால் எனக்கு நினைவில்லை.

7) எனக்கு பட்டா வழங்குவதற்கு முன்பு பூமியை அளந்து பார்த்தார்களா என்றால் கிரையம் என் தந்தை வாங்கியதால் எனக்கு தெரியவில்லை. யார் பட்டாவிற்கு விண்ணப்பம் செய்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். உட்பிரிவு செய்து பட்டா வழங்குவதற்கு அளந்து பார்க்காமல் கொடுக்கமாட்டார்கள்

என்றால் சரிதான். 20.07.2021ல் பட்டாவில் நிலம் குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது தெரியவந்தது. சரபங்கா திட்டத்தின்போது குஞ்சாண்டியூரிலுள்ள எனது வேறு நிலம் தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டது, அப்போது வருவாய் துறையினர் மூலம் சில விவரங்கள் தெரியவந்தது, அதன்படி தாவா சொத்தின் பத்திரங்கள் மற்றும் பட்டா ஆகியவற்றை பார்த்தபோது தான் நிலம் குறைவாக இருந்தது தெரியவந்தது. மேற்கண்ட விவரத்தை இந்த வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

8) பட்டாவில் நிலம் குறைவாக இருப்பது தொடர்பாக வருவாய் துறையினருக்கு நான் மனு கொடுத்தேனா என்றால் இல்லை, என் தந்தை கொடுத்தாக சொன்னார். எந்த தேதியில் மனு கொடுக்கப்பட்டது என்று வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நிலம் பட்டாவில் குறைவாக இருப்பது தொடர்பாக நான் ஏதேனும் வருவாய் துறையினருக்கு அளக்கவேண்டும் என்று மனு கொடுத்தேனா என்றால் இல்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 13.08.2026ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.